### ‘டாவோஸ்’ உலகப் பொருளாதார மன்றத்தில்

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள தொழில்வளர்ச்சியை வியந்து பாராட்டிய உலக நாடுகள்!

## தொழில்துறை அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி. ராஜா தகவல்!

டாவோஸ், ஜன.28-

**“டாவோஸ் உலகப் பொருளாதார மன்றத்தில் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள தொழில் வளர்ச்சியை உலக நாடுகள் வியந்து பாராட்டியுள்ளன” என்று தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.**

**இதுகுறித்து அந்த மாநாட்டில் அவர் பேசியதாவது :-**

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் நடந்த சர்வதேச அரங்கில் புகழ்பெற்ற உலகப் பொருளாதார மன்றத்தில் (World Economic Forum-WEF2025) தமிழ்நாடு தனி முத்திரையைப் பதித்து உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் உலகப் பொருளாதார மன்றத்தில் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் 10 ஆண்டுகாலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் எவரும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி அமைந்ததிலிருந்து கடந்த மூன்றாண்டுகளாக அரசின் சார்பில் தொழில்துறை அமைச்சரும், துறை சார்ந்த அதிகாரிகள்-வல்லுநர் குழுவும் தொடர்ந்து பங்கேற்று, மாநிலத்தின் தொழில்வளர்ச்சியை மேம்படுத்தும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

டாவோஸ் நகரில் நடந்த உலகப் பொருளாதார மன்றக் கூட்டம் என்பது முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போடுவதற்கான அரங்கமல்ல. இதை அண்டை மாநிலமான ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் அவர்களும் தெளிவாக-விரிவாக, பொருளாதார அறிவாற்றல் உள்ள அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தெரிவித்திருக்கிறார். உலகளாவிய தொழில் வளர்ச்சி எந்தத் திசையில் பயணிக்கிறது, அதற்கேற்ப உலகில் உள்ள நாடுகள் தமது தொழிற்கொள்கைகளை எப்படி வகுத்துள்ளன, அடுத்தடுத்த ஆண்டுகளில் எந்தெந்த துறையில் முதலீடுகள் பெருகும் உள்ளிட்ட தகவல்களை அறிந்துகொள்ளவும், பரிமாறிக்கொள்ளவுமான உலக நாடுகளின் சந்திப்பு மையம்தான் டாவோஸ் உலகப் பொருளாதார மன்றம்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு அரசின் சார்பில் அதில் பங்கேற்று, உலக நாடுகளின் எவற்றுடன் தொழிற்கூட்டமைப்பை மேம்படுத்தலாம் என்பதற்கான சந்திப்புகள், புதிய நிறுவனங்களுடனான கலந்துரையாடல்கள், தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டிருப்பது தொடர்பான விளக்கங்கள் ஆகியவற்றை முன்னெடுக்கும் அருமையான வாய்ப்பு அமைந்தது.

**தொழிற்சாலைகள் – வேலைவாய்ப்புகள்!**

கடந்த மே 2021 முதல் மூன்றாண்டுகளில் தமிழ்நாடு முன்னெடுத்த தொழிற்கொள்கையாலும், முதலீட்டாளர் சந்திப்புகள், உலக முதலீட்டாளர் மாநாடு ஆகியவற்றாலும் பன்னாட்டு-உள்நாட்டு நிறுவனங்களுடன் 893 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டதன் விளைவாக 10,07,974 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்ப்பதற்கான வாய்ப்புகளும் 19,17,917 நேரடி வேலை வாய்ப்புகளுடன் 31,53,862 மொத்த வேலைவாய்ப்புகள் உருவாவதற்கான சூழலை அமைத்து, தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட முறையில் பல தொழிற்சாலைகள் உருவாகி, வேலைவாய்ப்பை வழங்கி, உற்பத்தியைத் தொடங்கியிருப்பது குறித்த விவரங்களை டாவோஸில் நிறுவனங்களிடம் விளக்கி, அவர்களைத் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 50க்கும் மேற்பட்ட சந்திப்புகள் நடந்துள்ளன.

சிங்கப்பூர் நாட்டின் துணை பிரதமர் கான் கிம் யோங் அவர்களுடனான சந்திப்பின் வாயிலாக செமிகண்டக்டர் உற்பத்தி, வடிவமைப்பு மற்றும் மருத்துவத் தொழில்நுட்பம், மருந்துகள், உணவு ஏற்றுமதி ஆகியவை குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டு, சாதகமான பதில்களைப் பெற்றுள்ளோம்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பொருளாதாரத்துறை அமைச்சர் அப்துல்லா பின் டோக் அல் மார்ரி அவர்களுடனான சந்திப்பில் உணவு ஏற்றுமதி மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் ஐக்கிய அரபு நாடுகள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வது குறித்து உரையாடிய போது ஏற்கனவே சில மாதங்களுக்கு முன் தமிழ்நாடு முதலமைச்சர் உடன் சென்னையில் அவர் சந்தித்து பேசியதன் தொடர்ச்சியாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப் பட்டன.



**சூழலியல் கட்டமைப்பு!**

சவுதி அரேபியாவின் தொழில் மற்றும் கனிம வளத்துறை மூத்த அமைச்சர் பந்தர் அல்ஹோர்யெஃப் அவர்களுடனான சந்திப்பில் சவுதி அரேபிய அரசாங்கத்தின் தொழில்துறை சார்ந்த திட்டங்களுடன் தமிழ்நாட்டின் வளர்ச்சிகரமான உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப சூழலியல் கட்டமைப்புப் பொருந்தி வருவது குறித்து ஆக்கப்பூர்வமாகப் பேசப் பட்டுள்ளது. வானியல் தொழில்நுட்பம், குவாண்டம் கம்ப்யூட்டிங், நீடித்த தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஐரோப்பாவுடனான தமிழ்நாட்டின் தொடர்புகள் குறித்து ஃபின்லாந்து நாட்டின் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் கூட்டுறவு வளர்ச்சித் துறை அமைச்சர் வில்லி டாவியோ அவர்களுடன் நடந்த சந்திப்பில் ஆராய்ச்சித்துறைகளில் இந்தியாவும் ஃபின்லாந்தும் இணைந்து செயலாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தொழில் சூழலியல் கட்டமைப்பு கொண்ட தமிழ்நாட்டில் தனது உற்பத்தி அடித்தளத்தை விரிவுபடுத்தும் வகையில் மின்னணு துறையில் முன்னணி வகிக்கும் நிறுவனம் சாதகமான பதிலை அளித்துள்ளது. குறைந்தபட்சம் இரண்டு புதிய தகவல் மையங்களுக்கான முதலீட்டிற்கானப் பேச்சு வார்த்தைகள் நடந்தேறியுள்ளன. உலகளாவிய உணவு பதப்படுத்தும் நிறுவனம் ஒன்று தன்னுடைய உற்பத்திப் பொருட்கள் சார்ந்த முதலீட்டிற்கு ஆயத்தமாகியுள்ளது. பிரபலமா உணவுத் தயாரிப்பு நிறுவனம் தமிழ்நாட்டின் தளவாடக் கட்டமைப்பு மற்றும் வேளாண் வளர்ச்சியை அறிந்து முதலீடு செய்ய தரவுகளை கோரியுள்ளது.

ஜி.சி.சி மையங்களை அமைத்திட இரண்டு பெரிய நிதி நிறுவனங்கள் ஆர்வம் தெரிவித்துள்ளன. இரண்டு மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் தங்களுடைய ஜி.சி.சி மையங்களுடன் உற்பத்தி நிறுவனத்தை அமைக்கவும் ஆர்வம் தெரிவித்துள்ளன. டிட்கோ நிறுவனம் மூலமாக உருவாக்கப்படும் தமிழ்நாடு அறிவுசார் நகரம் குறித்து அறிந்த பன்னாட்டு முன்னணி பல்கலைக்கழகங்கள் நம்முடன் இணைந்து ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புதிய கண்டுபிடிப்புத் துறைகளில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுகின்றன. செயற்கை நுண்ணறிவு, பசுமை எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த இருதரப்பு கலந்துரையாடல்களின் வழியே மேம்பட்ட உற்பத்தி, ஆராய்ச்சி, தயாரிப்புகளில் முன்னேற்றம் ஆகியவற்றுக்கு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு, மிகச்சிறந்த மையமாகத் திகழ்வதை உலக நாடுகளிடம் உறுதி செய்துள்ளோம்.

கால்பந்து போட்டிகளில் உலகப் புகழ் பெற்ற மான்செஸ்டர் யுனைடெட் அமைப்புடன் நடந்த பேச்சு வார்த்தையின் பொழுது தமிழ்நாட்டில் துணை முதலமைச்சர் விளையாட்டுத் துறையில் ஏற்படுத்தி உள்ள முன்னேற்றத்தை எடுத்துச் சொன்னோம். அதனை ஆர்வமாக கேட்ட மான்செஸ்டர் நிறுவனத்தினர் தமிழ்நாட்டில் கால்பந்து போட்டிகளை ஊக்கப்படுத்தவும் குறிப்பாக பெண்கள் அணியை வலுப்படுத்தவும் விரைவில் சென்னையில் துணை முதலமைச்சர் சந்திக்க இருப்பதாக தெரிவித்தனர்.

**புதிய முதலீடுகளுக்கான சூழல்!**

டாவோஸ் உலகப் பொருளாதார மன்றத்தில் இந்தியா பெவிலியனைத் தொடங்கி வைக்கும் நிகழ்விலும் தமிழ்நாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மராட்டிய மாநில முதலமைச்சர் மற்றும் சில மாநிலங்களின் அமைச்சர்களுடன் இணைந்து அந்த நிகழ்வில் பங்கேற்று, தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் உருவாகியுள்ள தொழில்வளர்ச்சியையும், தொழிற்கட்டமைப்புகளையும், புதிய முதலீடுகளுக்கான சூழலையும் விளக்கி, ஏற்கனவே தொழில்துறையில் வளர்ந்துள்ள மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழ்நாடு ஆற்றி வரும் முக்கியப் பங்கினைக் குறிப்பிட்டேன்.

இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்களில் 43% பேர் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றுகிறார்கள் என்பது உலக அரங்கில் வியப்புடன் கவனிக்கப்படுகிறது. பல மாநிலங்கள் உள்ள ஒரு நாட்டில் ஒரேயொரு மாநிலம் எப்படி இந்தளவிற்கானப் பங்களிப்பை செய்ய முடிகிறது என்பது குறித்து மற்ற நாடுகளும் அறிந்துகொள்ளும் வகையில் டாவோஸ் உலகப் பொருளாதார மன்றத்தின் Women In Tech Hub அமர்வில் தமிழ்நாடு மட்டுமே பங்கேற்கும் வாய்ப்பு அமைந்தது. இத்துறை சார்ந்த வல்லுநர்களுடன் நடந்த கலந்துரையாடலின் போது தமிழ்நாட்டில் கடந்த நூறாண்டுகளாக திராவிட இயக்கம் முன்னெடுத்த பாலின சமத்துவம், கல்வி வாய்ப்பு, பெண்களுக்கான இடஒதுக்கீடு, அவர்களை அதிகாரமயப்படுத்துதல், திராவிட மாடல் அரசின் விடியல் பயணத் திட்டம், மகளிர் உரிமைத் திட்டம், தோழி விடுதி, புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டத்தில் வழங்கப்படும் உயர்தர ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவை குறித்து விரிவாக எடுத்துரைக்க முடிந்தது.

இந்த அமர்வில் முன்வைக்கப்பட்ட கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, ஜப்பான் நாட்டில் இதற்காகவே ஒரு தனிக் கூட்டம் நடத்துவதற்கும் அதில், தொழில்துறையில் பெண்களின் பங்களிப்பு குறித்து உலக நாடுகள் பங்கேற்கும் கலந்துரையாடலுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

‘டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார அமைப்பின் 2025-ம் ஆண்டுக்கான கூட்டத்தில் திமுக அரசு சாதித்தது என்ன?’ என கேள்வி எழுப்பியிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

பழனிசாமியின் அற்பத்தன அறிக்கை

பொருளாதாரத்தில் தமிழ்நாடு என்ன சாதித்தது? என்பதை பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் (Econmic advisary council report to pm report - EAC-PM) அறிக்கையை கொஞ்சம் புரட்டிப் பாருங்கள்! இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி பெற்றிருப்பதை அறிந்து கொள்ளாமல் அற்பதனமாக அறிக்கை விட்டிருக்கிறார் பழனிசாமி.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 1960-61ல் 8.7 சதவிகிதமாக இருந்தது. அது 2023-2024-ல் 8.9 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. தனி நபர் வருவாயைப் பொறுத்தவரை, தேசிய சராசரியோடு ஒப்பிடுகையில் தமிழகத்தின் சராசரி 2023-2024-ல் 171.1 சதவிகிதமாக உயர்ந்துள்ளது தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, கேரளா ஆகிய 5 மாநிலங்களும் 2023-24-ல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோராயமாக 30 சதவிகித பங்கினை கொண்டிருக்கின்றன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர அவர்களின் ஆட்சித்திறனால் தமிழ்நாட்டின் புகழ்க்கொடி உலக அரங்கில் உயர்ந்து பறக்கிறது.

உலக நாடுகள் வியக்கும் வகையில் தமிழ்நாட்டின் தொழிற்கட்டமைப்பும், பெண்களின் பங்களிப்பும் திராவிட மாடல் அரசின் செயல்பாடுகள் டாவோஸ் உலகப் பொருளாதார மன்றத்தில் கவனம் ஈர்த்துள்ள நிலையில், மாநிலத்தின் மீது எவ்வித அக்கறையுமில்லாமல் வெறும் அவதூறுகளை அரைவேக்காட்டுத்தனமாக எங்கேயோ ‘கிண்டி’த் தருவதை ஆளுநரும் எதிர்க்கட்சித் தலைவரும் மென்று கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

---

### வேங்கை வயல் பிரச்சினை:

# தி.மு.கழக அரசைக் குறை சொல்வதை ஏற்க முடியாது!

## தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி. பிரிவுத் தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் அறிக்கை!

சென்னை, ஜன.28-

“வேங்கைவயல் பிரச்சினையில் தி.மு.கழக அரசைக் குறைசொல்வதை ஏற்க முடியாது” என்று தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி., எஸ்.டி. பிரிவுத் தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் கூறியுள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி. துறை தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்களின் குடிநீர்த் தொட்டியில் மலம் கலந்த சம்பவத்தில் 800 நாட்கள் கழித்து பட்டியலினத்தைச் சேர்ந்த 3 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதாக உயர்நீதி மன்றத்தில் சி.பி.சி.ஐ.டி. போலீஸார் தெரிவித்திருப்பதற்கு பல தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

இந்நிலையில், புதுக்கோட்டை சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரி கையை ஏற்கக்கூடாது என்று வலியுறுத்துவதிலும் நியாயம் இருக்கிறது.

அதேசமயம் வேங்கைவயல் பிரச்சினையில் திமுக அரசைக் குற்றஞ்சாட்டுவதை ஏற்க முடியாது. பட்டியலின மக்களுக்கு எதிரான கட்சி திமுக என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த சிலர் முயல்கின்றனர். அது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தி.மு.க., அரசு சமூக நீதியின் பக்கம் தான் நிற்கும் என்ற நம்பிக்கை பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு எப்போதுமே உண்டு. தமிழ்நாடு அமைச்சரவையில் பட்டியலின சமுதாயத்தைச் சேர்ந்த 3 பேருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாய்ப்பு அளித்திருக்கிறார். இது, இதுவரை இல்லாத சிறப்பு. பட்டியலின, பழங்குடியின மக்களின் பாதுகாவலராகவே திமுக தொடர்ந்து திகழ்கிறது என்பதற்கான சான்றுகள் ஏராளம் உள்ளன.



இன்றைய தலைமைச் செயலாளர் முதல் பல முக்கிய பொறுப்புகளில் பட்டியலின சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டுள்ளது திராவிட மாடல் ஆட்சியின் சமூக நீதியின் வெளிப்பாடாகும்.

மதுரை மாவட்டம் பாப்பாபட்டி. கீரிப்பட்டி, நாட்டார்மங்கலத்தில் பட்டியலின சமுதாயத்தினர் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட முடியாத சூழல் பல ஆண்டுகளாக இருந்தது.

உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோது, நீண்ட கால பிரச்சினைக்குத் தீர்வு கண்டவர் மு.க.ஸ்டாலின். அவரே களத்துக்குச் சென்று இந்தப் பிரச்சினைக்கு சமரசத் தீர்வு கண்டவர். இச்சம்பவத்தைப் பட்டியலின மக்கள் இன்றும் நன்றியுடன் கூறுகிறார்கள்.

பட்டியலின இளைஞர்களைச் சுயச்சார்பு கொண்டவர்களாக மாற்றும் அம்பேத்கர் முன்னோடித் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் அறிமுகப்படுத்தினார். இந்தத் திட்டம் இன்று வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

உயர்கல்வி வரை பட்டியலின மாணாக்கர்களைப் படிக்க வைத்த பெருமை திராவிட மாடல் ஆட்சியையே சாரும். பட்டியலின மக்களின் வாழ்க்கைத் தரம் உயரத் திட்டம் தீட்டி அதனை வெற்றிகரமாக திமுக அரசு செயல்படுத்தி வருவதை மறந்துவிட முடியாது.

எல்லாவற்றுக்கும் மேலாக சட்டக்கல்லூரிக்கு அண்ணல் அம்பேத்கர் பெயரைச் சூட்டியும், அண்ணல் அம்பேத்கருக்கு மணிமண்டபமும் கட்டி பெருமைப்படுத்தியது தி.மு.க. ஆட்சியில் தான். அம்பேத்கர் பிறந்த மராட்டிய மண்ணில் கூட அவருக்கு இந்த பெருமை செய்யப்படவில்லை.

முன்பு காங்கிரஸைக் குறை சொல்லி, பா.ஜ.க.வை ஆட்சியில் அமர்த்தினார்கள். இன்றைக்குத் தான் காங்கிரஸின் அருமை மக்களுக்குப் புரிகிறது. அந்த நிலை தமிழ்நாட்டுக்கு வந்துவிடக்கூடாது.

தி.மு.க. அரசு மீது எந்த வழியிலாவது களங்கத்தை ஏற்படுத்தி உள்ளே நுழைந்துவிட பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசை எதிர்ப்போர் அதற்கு இடம் தந்துவிடக்கூடாது.

மக்களின் குரலுக்குச் செவி கொடுக்கும் அரசு தான் தி.மு.க. அரசு. அதனால், வேங்கைவயல் பிரச்சினையில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை அனைவரும் இணைந்தே முடிவெடுக்க வேண்டும்.

அரசை மட்டும் குறை சொல்லிக் கொண்டு இருக்காமல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய கடமை, அனைத்துக் கட்சியினருக்கும், சமுதாய அமைப்புகளுக்கும் இருக்கிறது.

எனவே, பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க இந்த அரசு துணையாக நிற்கும் என்று நம்புவோம். புதுக்கோட்டை சிறப்பு நீதிமன்றத்தில் சி.பி.சி.ஐ.டி. தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகையை ஏற்கக் கூடாது. சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோர அனைவருக்கும் உரிமை இருக்கிறது.

அதேசமயம், பட்டியலின மக்களுக்கு அரணாக விளங்கும் தமிழக அரசு மீது குறை சொல்வது பட்டியலின மக்களுக்கு நீதி கிடைக்காமல் போக வழி ஏற்படுத்திவிடும் என்பதை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி. துறை சார்பில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



திருவாரூர் மாவட்ட நிர்வாகம், கல்வித்துறை,பொது நூலகத்துறை இணைந்து நடத்திய3வது புத்தகத்திருவிழாவை தொடங்கிவைத்து, 2025ல் “வாழ்வியல் இலக்கியங்கள்” என்ற தலைப்பில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி பணிகள் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பேசினார். சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன்,நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ,மாவட்ட கண்காணிப்பாளர் கரண் காரட், நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ்,பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், நகர்மன்ற தலைவர் புவனப்ரியா, துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர்,முன்னாள் நகர செயலாளர் இரா.சங்கர் மற்றும் நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

---

### புகைப்பட நிபுணர் கோவை சுப்பு நிகழ்ச்சி ஏற்பாட்டில் – பாரத சாரண சாரணியர் இயக்கம் சார்பில்

# மணப்பாறையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு புகைப்பட கண்காட்சி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

திருச்சி, ஜன.28-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி, பாரத சாரண சாரணியர் இயக்கம் சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் வரலாற்று சிறப்பு புகைப்படக் கண்காட்சி, 28.01.2025 முதல் 3.2.2025 வரை காலை 9.30 மணி முதல் இரவு 8 மணி வரை திருச்சி மாவட்டம், மணப்பாறை சிப்காட்டில் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இப்புகைப்படக் கண்காட்சியை தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

இவ்விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, வி.செந்தில் பாலாஜி, மா.சுப்பிரமணியன், சா.சி.சிவசங்கர், டி.ஆர்.பி. ராஜா, கோவி. செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் நடைபெறும் வரலாற்று சிறப்பு புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் அனைவரும் கண்டுகளிக்க வருகை தருமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில்! அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

சேலம், ஜன. 28–

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில். மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாள். பொதுக்கூட்டம் சேலம் கோட்டை மைதானத்தில் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர். இரா. இராஜேந்திரன். தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு பேசியதாவது

‘மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் கூட்டம் நடத்துவதற்கு தி.மு.க.வுக்கு மட்டுமே உள்ளது 1965ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கல்லூரி மாணவர்களை போராட தூண்டிவிட்டார் என கூறி அன்றைய முதலமைச்சர் பக்தவச்சலம், கலைஞரை கைது செய்து பாளையங்கோட்டையில் தனிமை சிறையில் அடைத்தார்கள்

அப்போது பலர் உடலிலே மண் எண்ணை உற்றிக் கொண்டு தீ வைத்து எறிந்து உயிரை மாய்த்துக் கொண்ட வரலாறு தி.மு.கவுக்கு மட்டுமே உண்டு.

உலகத்தில் மொழிக்காக உயிரை மாய்த்துக் கொண்ட வரலாறுக்கு சொந்தக்காரர்கள் தி.மு.க வினர் தான் எடப்பாடி கும்பலுக்கு மொழிப்போர் (அ.தி.மு.க) தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் நடத்த என்ன உரிமை உள்ளது? 13.10.2022ல் பிரதமர் மோடியும் அமித்ஷவும் சேர்ந்து கொண்டு ஐ.ஐ.டி. மத்திய பல்கலைக் கழகங்களில் பயிற்சி மொழியாக இந்தி தான் இருக்க வேண்டும் மத்திய அரசின் தேர்வுகள் இனி இந்தியில் தான் இருக்க வேண்டும் என்று அறிக்கை விட்டனர்.

உடனடியாக இந்தியாவின் நெம்பர் 1 முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையை. 18.10.2022ல் கூட்டி தமிழ் மொழி உட்பட 22 மொழிகளை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தார். சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞரணி மாநாட்டில் துணை முதல்வர் இளைஞரணி செயலாளர். உதயநிதி ஸ்டாலின். தமிழ் மொழியை காக்க உயிரைவிட தயார். என்று அறிவித்தார் 5.300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பை கண்டுபிடித்தவர்கள் தமிழன் தான் என்று நமது முதல்வர் அறிவித்துள்ளார்.

ஆக இவ்வளவு பெரிய மொழி வரலாறு தமிழனுக்கு இருக்கிறது. ஆனால், 500 ஆண்டுகளுக்கு புகுந்த சமஸ்கிருதம் கலந்து வந்தது இந்தி மொழி இந்தி நுழைந்தால் கோயில்களில் நூழைய முடியாத சூழ்நிலை வரும் ஆழ்வார்கள் எழுதியது தமிழில்தான். காமராஜர். அண்ணா. கலைஞர் கிராமத்திற்கு கல்வி வந்து இருக்காது. கலைஞர் இல்லை என்றால். கல்லூரி வந்து இருக்காது.

இருமொழி கொள்கை தான் தமிழ்நாட்டின் கொள்கை என்று கூறினார்.

கூட்டத்தில் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., தொகுதி பார்வையாளர்கள் பார் இளங்கோவன், ஈ.ஜி. சுகவனம்,ஏ.ஆர்.விவேக், சா.ராஜசேகர்.. இரா. தமிழரசன். பி. மதிவாணன். மேயர் ஆ.ராமச்சந்திரன். பா.ரகுபதி, சா.சுப்பிரமணி, பெ. அசோகன், பகுதி செயலாளர் சி.பிரகாஷ், பி.கோமதி, தலைமை செயற்குழு உறுப்பினர் தாமரைக் கண்ணன், எஸ்.திருநாவுக்கரசு, மாணவர் அணி அமைப்பாளர் கோகுல், காளி .எம்.மணிகண்டன் உட்பட பலர் பங்கேற்றனர்.



சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி கிழக்கு மாவட்டம் தலைவாசல் தெற்கு ஒன்றியம் சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் வீரகனூர் பேருந்து நிலையம் முன்பு நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூர் செயலாளர் சரவணன் வரவேற்புரை ஆற்றினார். தெற்கு ஒன்றிய செயலாளர் பி.ஜி. அழகுவேல் தலைமை தாங்கினார். கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர் கு.சின்னதுரை, கழக பேச்சாளர் போடி காமராஜ், இளம் பேச்சாளர் சூரிய பிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் ஒன்றிய, பேரூர் ,நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் முத்துசாமி நன்றி உரையாற்றினார்.